இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 286 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – வைகாசி 14 – வியாழக்கிழமை 28 மே 2026 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 286 : Thiruvalluvar Year - 2057 - Vaikasi 14 - Thursday 28 May 2026 - Trichy ★★ 8 Pages ₹ 5.00



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை அண்ணா அறிவாலயத்தில், திருப்பூர் மத்திய மாவட்டச் செயலாளர் திருப்பூர் க.செல்வராஜ் சந்தித்தார். அதுபோது கழக முதன்மைச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான கே.என்.நேரு, கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, முன்னாள் அமைச்சரும், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினருமான எ.வ.வேலு ஆகியோர் உடனிருந்தனர்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, தி.மு.க. விவசாய அணி மாநில நிர்வாகிகள் கூட்டம் முடிந்ததும், அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் தலைமையில் மாநில நிர்வாகிகள் சந்தித்து, கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை வழங்கினர்.

## விவசாயிகளுக்கு இழைக்கப்படும் மாபெரும் நம்பிக்கை மோசடி!

# பயிர்க்கடன் தள்ளுபடி என்ற பெயரில் ‘SCAM’ செய்வதா?

## த.வெ.க. அரசுக்கு – சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கடும் கண்டனம்!

**சென்னை, மே 28 -**

**“பயிர்க்கடன் தள்ளுபடி என்ற பெயரில் Scam செய்வதா?” என்று த.வெ.க. அரசுக்கு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

தமிழக வெற்றிக் கழகம் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் “5 ஏக்கருக்கு குறைவாக நிலம் வைத்துள்ள விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கியுள்ள பயிர்க்கடன்கள் முற்றிலுமாக தள்ளுபடி செய்யப்படும். 5 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்துள்ள விவசாயிகள் கூட்டுறவு வங்கியில் வாங்கியுள்ள பயிர்க்கடன்களில் 50 சதவீதம் தள்ளுபடி செய்யப்படும்” என அறிவித்தது.

அதாவது, குறு, சிறு விவசாயிகளுக்கு முழுமையாகவும், பெரு விவசாயிகளுக்கு 50 சதவீதமும் தள்ளுபடி என அறிவித்தது. ஆனால், தற்போது அறிவித்துள்ள பயிர்க்கடன் தள்ளுபடியில் பல்வேறு படிநிலைகளில் தள்ளுபடி அறிவித்துள்ளது த.வெ.க. அரசு.

மேலும், 2025 மே மாதம் முதல் 2026 பிப்ரவரி வரையில் பெற்ற கடன்களில் மட்டுமே இந்த தள்ளுபடி வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது விவசாயிகள் மத்தியில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மூலதனச் செலவு அதிகரிப்பு, இடு பொருள் விலையேற்றம், பருவநிலை மாற்றம், இயற்கைப் பேரிடர் கள், நீர் பற்றாக் குறை, விளைச்சல் குறைவு, போதுமான விலை இல்லாமை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால்



விவசாயிகள் பல்வேறு நெருக்கடிகளையும் வாழ்வாதாரச் சிக்கல்களையும் சந்தித்து வருகிறார்கள்.

இந்தச் சூழலில் த.வெ.க. அரசு விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்தால் உதவியாக இருக்கும் என்ற நம்பிக்கையில் இருந்த விவசாயிகளை ஏமாற்றியுள்ளது த.வெ.க. அரசு.

இந்நிலையில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது :-

**பயிர்க்கடன் தள்ளுபடி என்ற பெயரில் விவசாயிகளை ஏமாற்றி இருக்கிறது த.வெ.க அரசு.**

**தேர்தல் பிரச்சாரத்தின் போது, 5 ஏக்கர் வரை நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு முழுமையான பயிர்க்கடன் தள்ளுபடி என்று வாக்குறுதி தந்தார்கள்.**

**ஆனால், இப்போது ரூ.50,000 வரையிலான கடனுக்கு மட்டுமே முழு தள்ளுபடி என்று சொல்லி இருக்கிறார்கள். இது விவசாயிகளுக்கு இழைக்கப்படும் அநீதி. மாபெரும் நம்பிக்கை மோசடி.**

**ஏற்கனவே, 200 யூனிட் வரை கட்டணமில்லா மின்சாரம் என்று சொல்லிவிட்டு, 500 யூனிட்டுக்கு மேல் பயன்படுத்தினால் அது கிடையாது என்று அதிர்ச்சி தந்தார்கள். இப்போது, பயிர்க்கடன் தள்ளுபடி என்ற பெயரில், SCAM செய்கிறார்கள்.**

**இப்படி, இன்னும் நிறைய ஏமாற்றங்களுக்கு மக்கள் மனசளவுல தயாரா இருக்கணுமா CM saar?**

இவ்வாறு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

# மே 29 வரை நாடு முழுவதும் வெப்ப அலை நீடிக்கும் !

## இந்திய வானிலை ஆய்வு மையம் தகவல்!

*புதுடெல்லி, மே 28 -*

நாடு முழுவதும் மே 29 வரை வெப்ப அலை நீடிக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரித்து உள்ளது. கோடை வெளியில் காரணமாக நாடு முழுவதுமே குறிப்பாக வட மாநிலங்களில் வெப்ப அலை மிகவும் கடுமையாக இருப்பதால் பொது மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு உள்ளது.



இதுவரை இல்லாத வகையில் வடமாநிலங்களில் வெப்ப அலை மிகவும் மோசமாக இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெப்ப அலை காரணமாக தெலுங்கானாவில் கடந்த 2 நாட்களில் மட்டும் சுமார் 51 பேர் வரை உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது. இதனிடையே கோடை வெப்பத்தின் தொடர்ச்சியாக மேலும் சில நாட்களுக்கு வெப்பத்தின் தாக்கம் நீடிக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரித்து உள்ளது.

இது தொடர்பான அறிவிப்பில் வடமேற்கு, மத்திய மற்றும் கிழக்கு இந்திய பகுதிகளில் கடும் வெப்ப அலை தொடரும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் கூறி இருக்கிறது.

பஞ்சாப், அரியானா, டெல்லி, ராஜஸ்தான் மற்றும் உத்தரப்பிரதேசம் ஆகிய 5 வட மாநிலங்களில் மிக கடுமையான வெப்ப அலை வரும் மே 29 வரை நீடிக்கும் என்றும் வானிலை ஆய்வு மையம் எச்சரித்து இருக்கிறது.

தமிழகத்தை பொறுத்த வரை கடலோர மாவட்டங்கள் உட்பட பல பகுதிகளில் இயல்பை விட வெப்ப நிலை அதிகமாக இருக்கும் என கூறப்பட்டு உள்ளது.

